### ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.41–க்கு வாங்குவதற்கு கடும் கண்டனம்!

# த.வெ.க. சர்க்கஸ் கும்பலின் ஆட்டத்திற்கு பொதுமக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள்!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் 'எக்ஸ்' தளத்தில் பதிவு!

**சென்னை, அக்.28-**

**த.வெ.க. அரசு ஒரு யூனிட் மின்சாரத்தை ரூபாய் 41-க்கு வாங்கவுள்ளதற்கு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். மேலும் இந்த சர்க்கஸ் கும்பலின் ஆட்டத்திற்கு பொதுமக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.**



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் எக்ஸ் தளப் பதிவு வருமாறு:-

Cheap CMஇன் சீழ்பிடித்த ஆட்சியில், வரலாற்றில் இல்லாத அளவுக்கு ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.35க்கு வாங்குவது போதாது என்று அடுத்தக்கட்டமாக ஒரு யூனிட் மின்சாரத்தை ரூ.41 கொடுத்து வாங்கவுள்ளதற்கு எனது கடும் கண்டனங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்காகத்தான், இரண்டு நாட்களுக்கு முன்பு, அரை டவுசர்கள் முதல் Online Abusers வரை, ராஜஸ்தானில் ஏதோ ஒரு இடத்தில் மின் உற்பத்திக்கு ஆகும் செலவை, கொள்முதல் விலை என்று உருட்டிக்கொண்டிருந்தார்களா?

நடத்துவது ஆட்சியும் இல்லை செய்வது நிர்வாகமும் இல்லை ஆனால், இவ்வளவு Confidentஆக நானும் முதலமைச்சர் என்று வலம் வரும் #DUMMY_CM, கூடுதல் விலைக்கு மின்சாரம் வாங்கி, அதற்கான செலவை மின்கட்டணம் என்ற பெயரில் மக்கள் தலையில் கட்டப்போகும் கொடுமைக்குப் பெயர் தான் மாற்றமா?

இவர்களின் கையாலாகாத் தனத்தால் விலைவாசி உயர்வில் தமிழ்நாடு முதலிடத்தில் இருக்கும் போது, பண்டிகை நேரம் பார்த்து ஆவின் பால் பொருட்களின் விலையையும் ஏற்றி இருக்கிறார்கள்.

இப்படி இடைவிடாமல் மக்கள் வயிற்றில் அடித்து, தமிழ்நாட்டை Reverse Gear போட்டுப் பின்னுக்கு இழுத்துச் செல்லும் இந்த சர்க்கஸ் கும்பலின் ஆட்டத்திற்கு மக்களே தக்கப்பாடம் புகட்டுவார்கள்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

### விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்கும் – முன்னாள் அமைச்சர்

# அன்பில் மகேஸ் பொய்யாமொழி கைது அவசியமற்றது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!



*சென்னை, அக்.28-*

திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்களின் அறிக்கை வருமாறு:

முன்னாள் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் நேற்று (26.10.2026), தனியார் பள்ளிகள் அங்கீகாரம் தொடர்பான வழக்கின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த வழக்கு விசாரணைகளுக்கு சட்ட ரீதியாக அவர் முழு ஒத்துழைப்பு வழங்கிவரும் நிலையில், இந்தக் கைது அவசியமற்றது.

தமிழ்நாட்டில் நடைபெறும் கொலை, கொள்ளை, பாலியல் துன்புறுத்தல்கள், சிறுவர், சிறுமிகள் காணாமல் போகுதல் போன்ற பிரச்சினைகளைத் திசை திருப்பவும், காழ்ப்புணர்வு காரணமாகவும் கைது நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஏற்க முடியாது.

அரசும், காவல்துறையும் கவனம் செலுத்த வேண்டிய பணிகள் ஏராளம் இருக்கின்றன.

இவ்வாறு அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### தங்கள் கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமே தவிர

# காவல் துறை ஆளுங்கட்சியின் ஐ.டி. விங் போலச் செயல்படக்கூடாது!

## தூத்துக்குடி பேட்டியில் – கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம்!

**தூத்துக்குடி, அக்.28-**

**காவல்துறை தனது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமே தவிர, ஆளுங்கட்சியின் ஐ.டி. விங் போலச் செயல்படக்கூடாது என கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. கண்டனம் தெரிவித்துள்ளார்.**

**தூத்துக்குடியில் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி ராஜாத்தி கருணாநிதி நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் குறிப்பிட்டதாவது:-**



த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, தமிழ்நாடு முழுவதும் 50க்கும் மேற்பட்ட கைதிகள் சிறைகளிலிருந்து தப்பிச் சென்றுள்ளதாகப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேபோல், காவல்துறையின் செயல்பாடுகளில் உள்ள தவறுகளைச் சுட்டிக்காட்டும்போது, ஆளுங்கட்சிக்குச் சாதகமாகப் பேசுவதும், அரசியல் தலைவர்களுக்குப் பதிலளிப்பதும் காவல்துறையின் பணியாக மாறியிருப்பது மிகவும் வருத்தமளிக்கிறது. சட்டம் ஒழுங்கை காக்கவேண்டிய காவல்துறை தனது கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டுமே தவிர, ஆளுங்கட்சியின் ஐடி விங் போலச் செயல்படக்கூடாது.

இந்த ஆட்சி பொறுப்பேற்றது முதல் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் தொடர்ந்து உயர்ந்து வருகின்றன.

இதனைத் தொடர்ந்து எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின்படி, மகளிர் அணியின் சார்பில் வரும் 31ஆம் தேதி அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் சட்டம் ஒழுங்கு சீர்கேடு மற்றும் விலைவாசி உயர்வைக் கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

தற்போது விலைவாசி உயர்ந்து வரும் சூழலில், அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள ஆவின் பொருட்களின் விலையை மட்டுமாவது கட்டுக்குள் வைத்திருக்க நடவடிக்கை எடுத்திருக்கலாம்.

ஆனால், அதையும் இந்த அரசு செய்யவில்லை.

இந்த ஆட்சியில் அரசின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள பொருட்களின் விலையைக்கூடக் கட்டுப்படுத்த முடியாத நிலையே நிலவுகிறது என்பதுதான் உண்மை.

இவ்வாறு அவர் கூறினார்.

### சென்னை கிழக்கு மாவட்ட

# மகளிர் அணி - மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆலோசனைகள் வழங்கினார்!



*சென்னை, அக்.28-*

கழகத் தலைமையின் ஒப்புதலுடன், சென்னை கிழக்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று (27.10.2026) காலை 10.00 மணியளவில், சென்னை, ஓட்டேரி, ஸ்டாரன்ஸ் சாலையில் அமைந்துள்ள எம்.கே.டி. மகாலில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான பி.கே.சேகர் பாபு எம்.எல்.ஏ. கலந்து கொண்டு, வருகின்ற 31.10.2026 அன்று நடைபெறவுள்ள கழக மகளிர் அணியின் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தைச் சிறப்பாக நடத்துவது குறித்தும்,

மேலும், தமிழகத்தில் கொலை, கொள்ளை, போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள் அதிகரித்து, சட்டம்-ஒழுங்கு சீர்குலைந்துள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகள், குழந்தைகள் கடத்தல் சம்பவங்கள் அதிகரித்து வருவது குறித்து எழுந்துள்ள புகார்களைக் கண்டித்தும், பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதிசெய்ய வலியுறுத்தியும் கழக மகளிர் அணி சார்பில் நடைபெறவுள்ள கண்டன ஆர்ப்பாட்டத்திற்கான முன்னேற்பாடு கள் குறித்தும் ஆலோசனைகளை வழங்கினார்.

இக்கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினரும், சென்னை மாநகராட்சி மேயருமான பிரியா ராஜன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சுதா தீனதயாளன் எம்.சி., மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., சுகாதாரத்துறைத் தலைவர் டாக்டர் ஜி. சாந்தகுமாரி, 6வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார், மாவட்டத் துணைச் செயலாளர் புனிதவதி எத்திராசன், பொதுக்குழு உறுப்பினர்கள் டாக்டர் ஏ.பி. பூர்ணிமா, சாவித்திரி வீரராகவன், அ. நிர்மலா தேவி மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட மகளிர் துணைச் செயலாளர்கள்,மாமன்ற உறுப்பினர்கள், மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டரணி மாவட்டத் துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

பெண்களின் பாதுகாப்பு, சமூகநீதி, ஜனநாயக உரிமைகள் மற்றும் மக்கள் நலனுக்காகத் தொடர்ந்து குரல் கொடுத்து, எதிர்க்கட்சியாக இருந்தாலும் மக்கள் பணியில் உறுதியாகச் செயல்படும் கழகத் தலைவர் அவர்களுக்கும், இளைஞர்கள் மற்றும் மகளிரின் உரிமைகளுக்காகத் தொடர்ந்து களமாடும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

சட்டம்-ஒழுங்கு சீர்கேட்டால் நிலவிவரும் மக்களின் கோபத்தைத் திசைதிருப்பித் தப்பித்துக்கொள்ளும் தி.மு.க. அரசின் எண்ணம் நிச்சயம் ஈடேறாது!" என்ற கழகத் தலைவரின் கண்டனத்தை முழுமையாக வழிமொழிந்து, விசாரணைக்கு ஒத்துழைத்து வந்த மேனாள் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களை அரசியல் காழ்ப்புணர்வுடன் கைது செய்த தி.மு.க அரசருக்கு கடும் கண்டனத்தை, தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி கிறது.

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறைகள், கொலை, கொள்ளை, குழந்தைகள் கடத்தல் மற்றும் போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச்சம்பவங்கள் குறித்து எழுந்துள்ள புகார்களைக் கண்டித்தும், பெண்களின் பாதுகாப்பையும் சட்டம்-ஒழுங்கையும் உறுதிசெய்ய வலியுறுத்தியும் த.வெ.க. அரசுக்கு இக்கூட்டம் கடும் கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

அரிசி, பருப்பு, பால், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு, மின்கட்டணச் சுமை, மின்வெட்டுப் புகார்கள் மற்றும் ஜனநாயக உரிமைகளைப் பாதிக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக எழும் குற்றச்சாட்டுகளுக்குத் தீர்வு காண வலியுறுத்தி, த.வெ.க. அரசின் மெத்தனப் போக்கிற்கு இக்கூட்டம் கடும் கண்டனம் தெரிவிக்கிறது.

கழகத் தலைமையின் அறிவிப்பின்படியும், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்களின் வழிகாட்டுதலின்படியும், வருகின்ற 31.10.2026 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில், சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் நடைபெறவுள்ள மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் மகளிர் அணி, மகளிர் தொண்டரணி மற்றும் கழகத்தின் அனைத்து மகளிர் நிர்வாகிகளையும் ஒருங்கிணைத்து, பெருந்திரளான பங்கேற்புடன் ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக நடத்திட இக்கூட்டம் ஒருமனதாகத் தீர்மானிக்கிறது.

இவ்வாறு அக்கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### தேனி சிறையில் 17 விசாரணைக் கைதிகள் தப்பியோட்டம்; சிறைத்துறை நிர்வாகத்தின் தோல்விக்கு யார் பொறுப்பு?

# சிறைக் காவலர்களை மட்டும் பணியிடைநீக்கம் செய்வது நியாயமா?

## மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!



*சென்னை, அக்.28-*

மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தேனி மாவட்டம் ஆண்டிபட்டி அருகே தேக்கம்பட்டி மாவட்டச் சிறையிலிருந்து 17 விசாரணைக் கைதிகள் தப்பியோடியிருப்பது தமிழகத்தின் சிறை நிர்வாகத்தில் நிலவும் பாதுகாப்புக் குறைபாடுகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்துள்ளது.

அக்டோபர் 26ஆம் தேதி இரவு நடைபெற்ற இந்தச் சம்பவத்தில், கைதி ஒருவருக்கு வலிப்பு ஏற்பட்டதாகக் கூறியதைத் தொடர்ந்து அறையின் கதவைத் திறந்த சிறைக் காவலர்களைத் தாக்கிவிட்டு கைதிகள் தப்பியதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவத்தில் காவலர்கள் காயமடைந்துள்ளனர். ஒன்பது சிறைத்துறைப் பணியாளர்கள் பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைக்குள் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகளைக் கண்காணித்து, அவர்கள் தப்பிச் செல்லாமல் தடுப்பதற்கான பொறுப்பு சிறைத்துறை நிர்வாகத்தையே சாரும். ஒரே நேரத்தில் 17 கைதிகள் தப்பியோடும் அளவுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகள் எவ்வாறு தோல்வியடைந்தன என்பதை அரசு விளக்க வேண்டும்.

பணியில் இருந்த காவலர்கள் தவறு செய்திருந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம். அதே நேரத்தில், பாதுகாப்பு நடைமுறைகள், பணியாளர் எண்ணிக்கை, கண்காணிப்பு ஏற்பாடுகள் மற்றும் நிர்வாக உத்தரவுகள் ஆகியவற்றில் குறைபாடுகள் இருந்தனவா என்பதையும் விசாரிக்க வேண்டும். கீழ்நிலைப் பணியாளர்களை மட்டும் தண்டித்துவிட்டு, நிர்வாகப் பொறுப்பில் இருப்பவர்களைப் பொறுப்பிலிருந்து விடுவிப்பது ஏற்கத் தக்கதல்ல.

தப்பியோடிய கைதிகளை விரைந்து கண்டுபிடிப்பதுடன், இச்சம்பவத்திற்குக் காரணமான பாதுகாப்புக் குறைபாடுகளையும் கண்டறிய வேண்டும். மாநிலத்தின் அனைத்து சிறைகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மறு ஆய்வு செய்யப்பட வேண்டும்.

தமிழக அரசு இச்சம்பவம் தொடர்பாக வெளிப்படையான விசாரணை நடத்தி, பொறுப்பானவர்கள் யாராக இருந்தாலும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சிறைக் காவலர்களைப் பணியிடைநீக்கம் செய்வது மட்டும் நிர்வாகத் தோல்விக்கான தீர்வாகாது. உண்மையான பொறுப்புக்கூறல் உறுதிசெய்யப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

### சட்டம் – ஒழுங்குப் பிரச்சினையைத் தொடர்ந்து – கைதிகள் தப்பி ஓடும் சம்பவங்கள்!

# தொழில் முனைவோர் தமிழ்நாட்டை மறக்கும் நிலையை ஏற்படுத்தும்!

## கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் அறிக்கை!



*சென்னை, அக்.28-*

சட்டம் ஒழுங்கு பிரச்சினையைத் தொடர்ந்து கைதிகள் தப்பி ஓடும் பிரச்சினை தமிழக மக்கள் இடத்தில் அச்சத்தை ஏற்படுத்துவதுடன் தொழில் முனைவோர்கள் தமிழகத்தை மறக்கும் நிலையை ஏற்படுத்தும் என கொங்கு நாடு மக்கள் தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் ஈ.ஆர்.ஈஸ்வரன் எச்சரித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

புழல் சிறையில் இருந்து இரண்டு கைதிகள் தப்பி ஓடிய செய்தி மறைவதற்குள் தேனி மாவட்ட சிறையில் இருந்து 17 கைதிகள் தப்பியுள்ள செய்தி பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரே நேரத்தில் இவ்வளவு கைதிகள் தப்பியது சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்பு நடந்துள்ளது.

தற்போதைய விஞ்ஞான உலகில் கண்காணிப்பு வசதிகள், பாதுகாப்பு வசதிகளும் நிறைந்துள்ள இக்காலகட்டத்தில் இது போன்ற சம்பவங்கள் நடப்பது பொதுமக்களுக்கு பெரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் தொடர்ந்து தமிழகம் முழுவதும் குழந்தைகள் காணாமல் போவது, கொலை, கொள்ளை, போதை பொருட்கள் பிரச்சினை இப்படி நித்தம் நித்தம் நடக்கும் நிலையில் தமிழகத்தில் முதலீடு செய்வதற்கு எந்த தொழில் முனைவோர்களும் முன்வர மாட்டார்கள். காவல் துறையை கையில் வைத்திருக்கும் முதல்வர் அவர்கள் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை இப்படி சந்தி சிரிக்க வைப்பது தமிழக நலனுக்கு நல்லதல்ல.

இச்சம்பவங்கள் பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதுடன் பொது அமைதிக்கு குந்தகம் விளைவிக்கின்றன. தமிழகத்தின் பக்கம் தொழில்துறையினர் திரும்பி கூட பார்க்க மாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

இரும்பு கரம் கொண்டு இந்த பிரச்சினையை அடக்கவில்லை என்றால் தமிழகத்தின் நிலைமை கேள்விக்குறியாகும் என்பதனை வருத்தத்துடன் கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் சார்பில் பதிவு செய்கிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளார்.

### மயிலை த.வேலு பங்கேற்பு! தியாகராயர் நகர் கிழக்கு – மேற்கு பகுதி

# தி.மு.க. மகளிர் அணி - மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## பகுதிச் செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி. – கோ.சு.மணி அறிக்கை!

*சென்னை,அக்.28-*

தியாகராய நகர் கிழக்கு - மேற்கு பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி. - கோ.சு.மணி ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராய நகர் மேற்கு, கிழக்கு பகுதி திமுக மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் இன்று (28.10.2026 புதன்கிழமை) மாலை 5 மணி அளவில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ராஜாஅன்பழகன் அலுவலகம் மனமகிழ் மன்றத்தில் நடைபெற உள்ளது. கூட்டத்திற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானு சலீம் தலைமையில் மாவட்ட கழகச் செயலாளர் மயிலை த.வேலு அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

எனவே இக்கூட்டத்திற்கு தியாகராய நகர் மேற்கு கிழக்கு பகுதி திமுக வட்டக் கழக செயலாளர்கள் மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி மாவட்ட நிர்வாகிகள் பகுதி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பகுதி கழக வட்டக் கழக மகளிர் துணைச் செயலாளர்கள் மற்றும் வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி பகுதி செயலாளர்கள்கே.ஏழுமலை MC கோ.சு.மணி ஆகியோர் கேட்டுக்கொள்கிறார்கள்.

பொருள் : சட்டம் ஒழுங்கு சீர்கேடு பெண்கள் குழந்தைகள் பாதுகாப் பின்மை மற்றும் விலைவாசி உயர்வை கண்டித்து 31/10/2026 அன்று நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் குறித்து

இவ்வாறு தியாகராய நகர் கிழக்கு - மேற்கு பகுதி செயலாளர்கள் கே.ஏழுமலை எம்.சி. - கோ.சு.மணி ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# ஆவின் நெய் விலை உயர்வு! 'தாய் மாமனின்' தீபாவளிப் பரிசு!

## தி.மு.க. ஐ.டி. பிரிவு விமர்சனம்!

சென்னை, அக்.28-

தீபாவளி மற்றும் பொங்கல் பண்டிகைக் காலங்களில் தனது திரைப்படங்களை 'பிளாக்'கில் அதிக விலைக்கு விற்ற தாய் மாமன், தற்போது பட டிக்கெட்டுகளை விற்க முடியாத காரணத்தால் ஆவின் நெய், வெண்ணெய், தயிர் மற்றும் இனிப்பு வகைகளின் விலையை ரூ.80 வரை உயர்த்தியுள்ளதாகத் திமுக ஐடி விங் தனது எக்ஸ் (X) தளத்தில் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தத் தீபாவளி பரிசு மக்களுக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாக அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அந்தப் பதிவில், 'இந்த லெக் தாதா முதலமைச்சர் கேமராவோடு எங்குச் சென்று ஆய்வு செய்கிறாரோ, அங்கு அடுத்த சில நாட்களில் ஏதேனும் பேரிடர் நடப்பது வாடிக்கையாகிவிட்டது' என்று சாடியுள்ளனர்.

மின்வாரியத்தில் ஆய்வு செய்தபோது தொடர் மின்தடையும், சிறைச்சாலையில் ஆய்வு செய்தபோது 19 கைதிகள் தப்பியோடியதையும் சுட்டிக்காட்டிய தி.மு.க. ஐடி விங், கடந்த அக்டோபர் 7-ஆம் தேதி மாதவரம் ஆவின் பால் பண்ணையில் ஆய்வு செய்ததைத் தொடர்ந்து அக்டோபர் 28 முதல் 67 ஆவின் பொருட்களின் விலை அதிரடியாக உயர்த்தப்பட்டுள்ளதை தோலுரித்துக் காட்டியுள்ளது.